# 2017 செயலாற்றுகை அறிக்கை

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## உள்ளடக்கம்


| இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| **01.** | | **மேன் நோக்கு** | **01** |
| | 1.1 | தூர நோக்கு | 01 |
| | 1.2 | பணிக்கூற்று | 01 |
| | 1.3 | இலக்குகள் | 01 |
| | 1.4 | பணிகளும் பொறுப்புக்களும் | 02 |
| | 1.4.1 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல் | 02 |
| | 1.4.2 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல் | 03 |
| | 1.4.3 | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | 03 |
| | 1.4.4 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டு செயற்பாட்டை கண்காணித்தல் | 03 |
| | 1.4.5 | நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டத்திற்கான நிதி வளங்களை ஒதுக்கீடு | 04 |
| **02.** | | **வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்தல் - 2017** | **08** |
| | 2.1 | ஒதுக்கீட்டுச் சட்டம் 2017 | 08 |
| | 2.2 | 2016 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தம் | 08 |
| | 2.3 | குறைநிரப்பு மதிப்பீடுகள் | 09 |
| | 2.4 | குறைநிரப்பு ஒதுக்கீடாக விசேட சட்ட ஆணைப்பத்திரம் | 09 |
| | 2.5 | வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை 2017 | 10 |
| | 2.6 | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | 13 |
| | 2.7 | 2017 வரவு செலவுத்திட்ட முகாமை | 14 |
| | 2.7.1 | நிதி மாற்றல்கள் | 14 |
| | 2.7.2 | குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் | 14 |
| | 2.7.3 | வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல் | 15 |
| **03.** | | **2018 இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்** | **15** |
| | 3.1 | வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கான வழிகாட்டல்கள் | 16 |
| **04.** | | **விசேட செயற்பாடுகள்** | **16** |
| | 4.1 | அரசாங்க தொழில் முயற்சிகளின் வரவு செலவுத்திட்ட முகாமை | 16 |
| | 4.2 | அமைச்சரவை விஞ்ஞாபனம் | 17 |
| | 4.3 | சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல் | 17 |
| **05.** | | **தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு** | **17** |
| | 5.1 | பதவியணி | 17 |
| | 5.2 | மனிதவள அபிவிருத்தி | 19 |
| | 5.2.1 | வெளிநாட்டு பயற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள் | 19 |
| | 5.2.2 | உள்நாட்டு பயிற்சி | 22 |
| | 5.3 | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிர்வாகம் | 26 |
| | 5.3.1 | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | 27 |
| | 5.3.2 | கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள் | 27 |
| | 5.4 | நிறுவனக் கட்டமைப்பு | 28 |

# 1. மேன் நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது பாராளுமன்ற சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்டப் பொருளாதார வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவினத்தினை துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதை திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முக்கியமாகக் கொண்டுள்ளது. நடுத்தரகால வேலைச்சட்டகமானது துறை ரீதியான கொள்கை உபாயங்களின் பின்னணியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலக்கினை நோக்கி நிதி திட்டங்களை சமர்ப்பிக்கும் அதேவேளை, அரசாங்க செலவின முகாமைத்துவத்தின்பால் கூடிய கவனம் செலுத்துகின்றது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான உசாவுகையின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.1 தூரநோக்கு

"நிதி வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி"

## 1.2 பணிக்கூற்று

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரசாங்க பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்களுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு.

## 1.3 இலக்குகள்

- நிதி வளங்களின் பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டின் ஊடாக மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்துதல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்
- அரசிறை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்
- சிறந்த மதிப்பீட்டுக்கான கற்றல் மற்றும் பகிர்வு

### 1.4 பணிகளும் பொறுப்புக்களும்

#### 1.4.1 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்

- வரவு செலவுத் திட்டமிடல் செயல்முறை தொடர்பான திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்டத்திற்கான பாரிய பொருளாதார வரைசட்டகத்தைத் தயாரித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் பாரிய பொருளாதார வரைசட்டகத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்பை / வரவு செலவுத் திட்டக் கடிதங்களை சமர்ப்பித்தல்.
- செலவிடும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவிடும் முகவராண்மைகள், வருமானத் திணைக்களங்கள் மற்றும் தனியார்த் துறைகளுடனான வரவு செலவுத் திட்டக் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- வருமானம், செலவினம், நிதியிடல் மற்றும் கடன்பெறும் எல்லைகளை தீர்மானித்தல் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு)
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான வரவு செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.
- சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்தும் சட்டமா அதிபதியிடமிருந்தும் வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளதல்
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்ட வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக அமைச்சரவையுடன் கலந்துரையாடுதல்.
- வரவு செலவுத் திட்ட உரையின் இரண்டாவது வாசிப்பு - வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் விவரமான சமர்ப்பிப்பு.
- இரண்டாவது வாசிப்பு விவாதம், வாக்கெடுப்பு மற்றும் அங்கீகாரம்
- வரைவு மதிப்பீட்டில் உத்தேச திருத்தங்களின் பட்டியலைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதம், வாக்கெடுப்பு மற்றும் அங்கீகாரத்தைப் பெறுதல்
- ஒதுக்கீட்டுச் சட்டத்திற்காக கௌரவ சபாநாயகர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி, திட்மிடல் அமைச்சர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுதல் (டிசம்பர் 31 இற்கு முதல்)
- செலவிடும் முகவராண்மைகளுக்கும் வருமானத் திணைக்களங்களுக்கும் செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை அனுப்புதல்.

### 1.4.2 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

- அங்கீகாரம் அளித்தல் உள்ளடங்களாக வரவு செலவுத்திட்டச் செயற்படுத்துகை தொடர்பான வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடுதல்.
- வரவு செலவுத்திட்ட மீளாய்வு செயற்படுத்துகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களுக்காக காசு விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.
- அரச கணக்குகள் குழு, அரச நிதிக் குழு, அரச தொழில் முயற்சிகள் மீதான குழு மற்றும் பாராளுமன்ற கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- பாராளுமன்ற குழுக்கள், சனாதிபதியின் கூட்டங்கள் மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- ஓதுக்கீட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு நிதி ஏற்பாடுகளை மீள் இடம் மாற்றுதல்.
- உரிய அமைச்சுக்களின் மூலம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு செயற்படுத்துகை முன்னேற்றத்தினை கண்காணித்தல்.
- நிதிபிரமானக் குறிப்பு 66 இன் கீழ் மாற்றல்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்.

### 1.4.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- வர்த்தக, களஞ்சியங்கள், அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளை தீர்மானித்தல் மற்றும் செலவின முகவராண்மைகளிலிருந்து வேண்டுகோள்களின் அடிப்படையில் வரையறைகளைத் திருத்துதல்.

### 1.4.4 வரவு செலவுத்திட்ட கண்காணிப்பினைச் செயற்படுத்தல்

- வரவு செலவுத்திட்ட கண்காணிப்புத் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் சுற்று நிருபங்களை வெளியிடுதல்.
- திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் உள்ளடங்களாக அமைச்சுக்களின் நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை கண்காணித்தல்.

### 1.4.5 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் நிதி வளங்களை மீள் ஒதுக்கீடுசெய்தல்

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் கீழ் கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் முன்மொழியப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்ளுக்குத் தேவையான நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல்.
- சமூக நல செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடு செய்தல்.
- அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் ஏனைய அத்தியவசிய தேவைகளுக்காக நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல்.

**அட்டவணை 1 : செயலாற்றுகை சுருக்கம் - 2017**

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல். | செலவின முகாமைத்துவம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிடுதல். | அரசாங்க செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல். | 5/2016 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. (2017 வரவு செலவுத்திட்ட செலவின அங்கீகாரம் அளித்தல் மற்றும் பொது செலவின முகாமை). |
| | எதிர்பாரா செலவினத்திற்கான மேலதிக நிதி ஒதுக்கீடு மற்றும் பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல். | நிதி முகாமைத்துவமும் தேவையற்ற செலவினங்களை குறைத்தலும் | பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றினை சமர்ப்பிக்காது வெள்ளம், வறட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கான மேலதிக நிதி ஒதுக்கீட்டுத் தேவை நிவர்த்தி செய்யப் பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் நிதி மீள் ஒதுக்கீட்டினை முகாமை செய்தல். |
| | நிதிப்பிரமாணக்குறிப்பு 66 மற்றும் 69 மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் நிதி மாற்றல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குள் செலவினத்தினைப் பேணுதல். | மேற்குறித்த ஒழுங்கு விதிகளுக்கமைய 1,602 விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில் 1,384 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல் மற்றும் 72 விண்ணப்பங்கள் கருத்திட்ட மாற்றல்களுக்கானது. |

| | | | |
|---|---|---|---|
| | 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துதல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ) ஆம் பந்தியினை திருத்தல் (கடன் பெறுகை வரையறை)<br><br>பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டது. | 2017.09.17 ஆந் திகதி ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2017.12.11 ஆந் திகதி ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2017.12.11 ஆந் திகதி இரண்டாவது வாசிப்பு.<br><br>2017.12.11 ஆந் திகதி பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2017.12.14 ஆந் திகதி சபாநாயகரினால் 2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் சான்றுப் படுத்தப்பட்டது. |
| 2. 2018 இற்கான தேசிய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை வழங்குதல். | 2017 ஜூன் மாதமளவில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு வழிகாட்டல்களுடன் வரவு செலவுத்திட்ட அழைப்பினை விநியோகித்தல். | வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம் 2017.07.25 அன்று வெளியிடப்பட்டது 2018-2020 அரசாங்க அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகத்திற்குள் 2018 இற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. |
| | செலவின முகவராண்மை திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தல். | நிதி வெகுசன ஊடக அமைச்சரின் தலைமையில் அக்கரை செலுத்துநர்களுடன் வரவு செலவுத்திட்ட முன்னர் கூட்டங்களை நடாத்துதல்.<br><br>தொடர்புடைய திணைக்கள முகவர் திறைசேரி செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் இடம் பெற்றன. |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் | உண்மையான தேவைகளை கருதி யதார்த்த பூர்வமான வரவு செலவுத் திட்டத்தினை | |

| | | | |
|---|---|---|---|
| | இடம் பெற்றன. | தயாரித்தல். | |
| | 2018 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. | ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2017 ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>விபரமான மதிப்பீடுகளின் தயாரிப்பு | 2017.10.15 ஆந் திகதிய வர்த்தமானியில் 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2017.10.09 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது<br><br>2017.11.09 ஆம் திகதி வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2017.12.09 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2017.12.09 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டது.<br><br>2017.12.13 ஆந் திகதி நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆணைப் பத்திரம் வழங்கப்பட்டது.<br><br>அனைத்துத் தொடர்புடைய செலவின தலைப்புகளினதும் பின்னணித் தகவல்களுடன் விபரமான மதிப்பீடுகள் அச்சிடப்பட்டன. |
| 3. அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | அரசாங்கத்தின், துறை ரீதியான கொள்கை மற்றும் செலவினம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான சிபாரிசுகளையும் அவதானிப்புகளையும் காலத்திற்கு காலம் | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை உடனுக்குடன் சமர்ப்பித்தல். | குறித்த ஆண்டின் போது 411 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 504 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏனைய திறைசேரி திணைக்களங்களுக்கு கருத்துரைகள் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்தல். | | வழங்கப்பட்டன. |
| 4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை | அறிக்கைகள் சமர்ப்பிப்பு | பின்வரும் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு<br>(ஈ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் | பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செலவின மீளாய்வு – 2017<br>(ஆ) செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.<br>(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2017<br>(ஈ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் 2017 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியின் மூலம் மனித வள அபிவிருத்தி. | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துடன் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகளில் 30 பேர் கலந்து கொண்ட அதேவேளை 84 அலுவலர்கள் உள்நாட்டுப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். |
| | திணைக்கள முற்பணக் கணக்குக் கட்டுபாடு | முற்பணக் கணக்கு வரையறைகளுக்குள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள அலுவலர்களின் விண்ணப்பங்களுக்கு கடன் / மானியம் வழங்குதல் | அங்கீகரிக்கப்பட்ட வரையறை களைப் பின்பற்றி, அனர்த்த கடன், துவிச்சக்கர வண்டிக் கடன், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பன ரூபா 9,990,346 ஆகக் காணப்பட்டது. |
| | கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள். | கணக்காய்வு வினாக்களைக் குறைத்தல்<br><br>அரசாங்க கணக்குகள் குழு, அரசாங்க தொழில்முயற்சிகள் குழு மற்றும் அரசாங்க பொது நிதி குழு என்பவற்றுக்கு சமூகமளித்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் (07) பதிலளிக்கப்பட்டது. |

## 2. வரவு செலவுத்திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்தல் - 2017

### 2.1 2017 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2016 டிசம்பர் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது வாசிப்பினைத் தொடர்ந்து 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமொன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமானது முதலாவது அட்டவணை, இரண்டாவது அட்டவணை மற்றும் மூன்றாவது அட்டவணை ஆகிய மூன்று அட்டவணைகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு அட்டவணையும் கீழே அட்டவணை 2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்களை உள்ளடக்கியிருக்கும்.

**அட்டவணை 2 : 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்**

| | | |
|---|---|---|
| **முதலாவது அட்டவணை** | நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுச் சேவைகளுக்கான செலவினம். | மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 2,113 பில்லியன். |
| **இரண்டாவது அட்டவணை** | சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட திரட்டு நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய அரசாங்கத்தின் செலவினம். | விசேட சட்டங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,515 பில்லியனாகும். |
| **மூன்றாவது அட்டவணை** | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பான செலவினம். | அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்து மதிப்பிடப்பட்ட பங்களிப்பு ரூபா 5 பில்லியனாகும். |

*மூலம் : தே.வ.செலவுத்திட்டத் திணைக்களம் / அரச கணக்குகள் திணைக்களம்*

இதற்கமைவாக, முழு அரசாங்க செலவினமும ரூபா 3,633 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது அவற்றுள் மீண்டெழும் செலவினமாக ரூபா 1,947 பில்லியன் மற்றும் மூலதனச் செலவினமாக ரூபா 881 பில்லியனும் பொதுபடுகடன் கொடுப்பனவுக்காக ரூபா 800 பில்லியனும், முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான ரூபா 5 பில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவானது கடன்பெறுகை வரையறையினை ரூபா 1,579 பில்லியனாக குறிப்பிட்டுள்ள அதேவேளை 2016 க்கான கடன்பெறுகை வரையறை ரூபா 1,699 பில்லியனாகக் காணப்பட்டது.

### 2.2 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

2017 ஆம் வருடத்தின் போது காணப்பட்ட மோசமான காலநிலை காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிப்படைந்ததுடன் அரசாங்க வருமானத்திலும் பற்றாக்குறை ஏற்பட்டது. மோசமான காலநிலையினால் ஏற்பட்ட சேதம் காரணமாக நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக மேலதிக நிதி தேவைப்பட்டது. வெளிநாட்டுத் துறையிலிருந்து ஏற்பட்ட அழுத்தமானது ரூபா மதிப்பிறக்கத்தின் மூலம் ஏற்பட்டதுடன் படுகடன் சேவை செலவினத்தில் அதிகரிப்பு அதிகரிப்பு ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தது. இப்பின்னணியில் சாதகமான திரவ மட்டத்தினைப் பேணும் வகையில் 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைத் திருத்தியதன் மூலம் 2017 ஆம் ஆண்டிற்கான கடன்பெறுகை வரையறையினை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

### 2.3 குறைநிரப்பு மதிப்பீடுகள்

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின பற்றுச்சீட்டுக்களை செலுத்துவதற்கு ரூபா 53 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடொன்றினை சமர்ப்பித்ததுடன் விசேடமாக பாதை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான காணி சுவீகரிப்பு நட்டஈட்டுக் கொடுப்பனவுக்காக முற்பணங்களின் கொடுப்பனவுக்காக இக்குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது. இத்தொகையினை கணக்கீடு செய்வதற்கு ஆணைப்பத்திர இல.01 இனை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் வழங்கப்பட்டதுடன் குறித்த தொகையினை எதிர்பாரா செலவின நிதியத்திலிருந்து மீளப்பெற்று குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியத்தில் பயன்படுத்துவதற்கு முடியுமாயிருந்தது.

### 2.4 குறைநிரப்பு ஒதுக்கீடு என்ற வகையில் விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

குறித்த வருடத்தில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் விசேட சட்ட சேவைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக மேலதிக நிதி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரத்தினை நிதி அமைச்சர் வழங்குதல் வேண்டும். இந்த வகையில் ஐந்து (5) விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் குறித்த வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: குறைநிரப்பு ஒதுக்கீடாக விசேட சட்ட ஆணைப்பத்திரம்**

| அதிகார இல. | செலவினம் | | நோக்கம் /குறிக்கோள | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | தலைப்பு இல. | நிறுவனம் | | |
| 01 | 07 | நீதிச்சேவை ஆணைக்குழு | ஆணைக்குழுவின் உறுப்பினர்களான நீதிபதிகளது சம்பள திருத்தத்திற்கமைவாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல | 140,000 |
| 02 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம | படுகடன் சேவைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டுப் பற்றாக்குறையினை ஈடு செய்தல் | 146,460,000,000 |
| 03 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம | படுகடன் சேவைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டுப் பற்றாக்குறையினை ஈடு செய்தல் | 32,100,530,000 |
| 04 | 04 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம | பொது நிர்வாக சுற்றறிக்கை இல.3/2016 இனால் நீதிபதிகளுக்கான சம்பள திருத்தத்திற்கமைவாக உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பள அதிகரிப்பினை வழங்குதல் | 2,700,000 |
| 05 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம | வட்டிக் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டுப் பற்றாக்குறையினை ஈடு செய்தல் | 644,215,000 |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்*

## 2.5 வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை - 2017

அரசாங்கத்தின் மொத்த உண்மையான செலவினம் 2016 இல் காணப்பட்ட ரூபா 3,106 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 3.470 பில்லியனாக ரூபா 364 பில்லியனால் அதிகரித்தது. இது மதிப்பிடப்பட்டிருந்த செலவினத்திற்கெதிராக ரூபா 3,628 பில்லியன் என்பதுடன் மதிப்பிடப்பட்ட செலவினத்தினைவிட ரூபா 158 பில்லியன் குறைவானதாகும். 2017 இல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளின் மொத்த பயன்பாட்டு விகிதம் 96 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இது 2016 இல் காணப்பட்ட 84 சதவீத செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் 12 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1) ஆம் உறுப்புரையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏற்பாடுகளில் (வழங்கல் சேவைகள் மீதான செலவினம்) குறித்த வருடத்தின்போது போது 69 சதவீதமாக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 2016 இல் காணப்பட்டதனைவிட 69 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினத்தின் பயன்படுத்துவதானது தெளிவாக வீழ்ச்சியொன்றினை காட்டுவதுடன் ஆரம்ப முதலீட்டுக்கு எதிராக 75 சதவீதத்தினை அல்லது ரூபா ரூபா 658 பில்லியனை பதிவாக்கியுள்ளது.இது 2016 இல் காணப்பட்ட 50 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 881 பில்லியன் ஆரம்ப மதிப்பீட்டுக்கு எதிரானதாகும். மீண்டெழும் செலவினங்களின் பயன்பாடு 91 சதவீதமாக அல்லது ரூபா 1,947 பில்லியனாகக் காணப்பட்டது.

விசேட சட்டத்தின்கீழ் செலவின மதிப்பீடுகள் (நிதிக் குறியீடு 21-ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணை) ஆரம்ப மதிப்பீடான ரூபா 1,515 பில்லியனுக்கு எதிரான ரூபா 123 பில்லியன் செலவினத்தினைக் காட்டியது. இது அடிப்படையில் ரூபா மதிப்பிறக்கத்தின் காரணமாக படுகடன் சேவைகளின் அதிகரிப்பு, லிபோ விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் மீள் கொடுப்பனவு மற்றும் வட்டிக்கொடுப்பனவில் அதிகரிப்புக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு கடந்த 24 மாதங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை என்பவற்றினாலாகும்.

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 1 ஆவது அட்டவணையின் ஊடாக மொத்த செலவினம் மதிப்பிடப்பட்டிருந்த ஆரம்ப செலவினமான ரூபா 2,113 பில்லியனுக்கு எதிராக ரூபா 1,832 பில்லியனை செலவிட்டதன் மூலம் 87 சதவீத முன்னேற்றத்தினைக் காட்டியது. நிகழ்ச்சித்திட்டம் 1– தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2– அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவின பதிவின் அடிப்படையில் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை 4 : வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு 2016-2017**

| செலவின வகுதி | ரூபா.மில் | | | |
|---|---|---|---|---|
| | 2016 | | 2017 | |
| | வ.செ.தி | செலவினம் | வ.செ.தி | செலவின |
| **ஒதுக்கீட்டுச் சட்டம் (1 அட்டவணை)** | **2,507** | **1,719** | **2,113** | **1,832** |
| நிகழ்ச்சித்திட்டம் -1 | 1,021 | 988 | 965 | 1,011 |
| நிகழ்ச்சித்திட்டம் -2 | 1,486 | 731 | 1,148 | 821 |
| **விசேட சட்ட சேவை (2 அட்டவணை)** | **1,192** | **1,388** | **1,515** | **1,638** |
| **முற்பணக் கணக்கு (3 அட்டவணை)** | **5** | **0*** | **5** | **4** |
| **மொத்தம்** | **3,699** | **3,107** | **3,628** | **3,470** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

* *கடன் மீள் அறவீடு வரவுசெலவுத்திட்ட தொகையினைவிட அதிகளவு பதிவாகியுள்ளதுடன் முற்பணக் கணக்கு செயற்பாடுகள் 2016 வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியத்தினைப் பயன்படுத்தாது முகாமை செய்யமுடியுமாக இருந்தது.*

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்கச் செலவினத்தின் நிதி மூலம் அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5 : அரசாங்க செலவினத்தின் நிதி மூலம்**

| நிதிக் குறியீடு | நிதி மூலம் | 2016 ரூபா.பில் | 2017 ரூபா.பில் |
|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 1,466.6 | 1,572.2 |
| 12 | வெளிநாட்டுக் கடன்கள் | 205.4 | 214.7 |
| 13 | வெளிநாட்டு மானியம் | 6.9 | 6.3 |
| 14 | மீளளிக்கும் வெளிநாட்டு கடன் | 207 | 2.1 |
| 15 | மீளளிக்கும் வெளிநாட்டு மானியம் | 0.2 | 0.1 |
| 16 | மறுதிறத்து நிதி | 0. 5 | 0.5 |
| 17 | வெளிநாட்டு நிதி தொடர்பான உள்நாட்டு செலவினம் | 0.3 | 35.6 |
| 21 | விசேட சட்டங்கள் | 1,387.6 | **1,638.0** |
| **மொத்தம்** | | **3,106.5** | **3,469.7** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

**அட்டவணை 6: பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடுகள்**

ரூபா மில்

| அமைச்சின் பெயர்/ செலவின விடயம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | திறைசேரி நானாவித தலைப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடு | விசேட ஆணைப் பத்திரம் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடு | மொத்த ஏற்பாடுகள் (1)+(2)+(3) | உண்மையான செலவினம் | பயன்படுத்தபடாத ஏற்பாடுகள் (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| விசேட செலவின அலகுகள் | 17,686 | 5,458 | 3 | 23,147 | 16,466 | 6,681 |
| புத்த சாசன | 1,870 | 1,169 | | 3,039 | 2,164 | 875 |
| நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 38,783 | 32,189 | 179,205 | 71,193 | 58,564 | 12,629 |
| பாதுகாப்பு | 284,044 | 13,087 | | 297,131 | 278,578 | 18,553 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | 14,046 | 40,507 | | 54,554 | 31,578 | 22,975 |
| அனர்த்த முகாமைத்துவம் | 4,612 | 12,150 | | 16,761 | 12,374 | 4,388 |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் | 12,550 | 1,044 | | 13,595 | 13,509 | 86 |
| நீதி | 10,231 | 1,167 | | 11,398 | 10,017 | 1,381 |
| சுகாதாரம்,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவம் | 160,972 | 11,639 | | 172,611 | 146,073 | 26,539 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெளிநாட்டலுவல்கள் | 9,689 | 1,323 | | 11,012 | 9,949 | 1,063 |
| போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் | 51,299 | 21,058 | | 72,357 | 52,160 | 20,197 |
| உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் | 163,405 | 41,823 | 53,000 | 258,228 | 239,461 | 18,767 |
| விவசாயம் | 21,394 | 40,805 | | 62,199 | 54,888 | 7,311 |
| மின்வலு புதுப்பிக்கக்கூடிய சக்தி | 1,059 | 8,157 | | 9,216 | 8,582 | 634 |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 2,699 | 5,905 | | 8,603 | 7,940 | 663 |
| உள்நாட்டலுவல்கள் | 44,543 | 12,395 | | 56,938 | 40,427 | 16,511 |
| காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு | 9,135 | 365 | | 9,500 | 7,556 | 1,944 |
| வீடமைப்பு மற்றும் நிர்மாணம் | 3,268 | 4,780 | | 8,048 | 8,042 | 5 |
| சமூகவலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை | 16,250 | 55,372 | | 71,622 | 66,581 | 5,041 |
| கல்வி | 76,944 | 35,970 | | 112,913 | 81,027 | 31,886 |
| பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 213,316 | 1,985 | | 215,301 | 214,107 | 1,193 |
| பெருந்தோட்டக் கைத்தொழில்கள் | 8,221 | 2,738 | | 10,959 | 8,209 | 2,749 |
| விளையாட்டுத்துறை | 4,484 | 2,470 | | 6,955 | 4,178 | 2,777 |
| மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி | 3,367 | 1,001 | | 4,368 | 2,425 | 1,943 |
| சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் | 17,441 | 2,344 | | 19,786 | 17,619 | 2,167 |
| பிராந்திய அபிவிருத்தி | 622 | 37 | | 658 | 436 | 222 |
| அபிவிருத்தி ஒப்படை | 192 | 144 | | 336 | 260 | 76 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகம் | 9,921 | 5,975 | | 15,896 | 10,370 | 5,527 |
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி | 312 | 19 | | 331 | 310 | 20 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி | 5,671 | 2,364 | | 8,035 | 5,566 | 2,469 |
| கிராமிய பொருளாதார அலுவல்கள் | 8,330 | 3,206 | | 11,536 | 8,796 | 2,740 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 214,123 | 34,189 | | 248,312 | 216,753 | 31,559 |
| தேசிய நல்லிணக்க, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் | 677 | 401 | | 1,078 | 771 | 306 |
| பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி | 432 | 9,532 | | 9,964 | 1,549 | 8,415 |
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் | 855 | 504 | | 1,359 | 634 | 725 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் | 57,623 | 450 | | 58,074 | 46,195 | 11,878 |
| நிலையான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் | 3,500 | 169 | | 3,670 | 3,466 | 204 |
| மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி | 15,806 | 24,429 | | 40,234 | 29,972 | 10,263 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டலுவல்கள், வடமேற்கு அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | 7,928 | 1,240 | | 9,168 | 7,205 | 1,963 |
| தேசிய நல்லிணக்க மற்றும் மீள் கட்டமைப்பு | 1,836 | 1,703 | | 3,539 | 2,815 | 725 |
| நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் | 22,846 | 11,396 | | 34,242 | 27,318 | 6,924 |
| விசேட ஒப்படை | 118 | 47 | | 165 | 112 | 53 |
| துறைமுகம் மற்றும் கப்பற்றொழில் | 2,363 | 37 | | 2,400 | 620 | 1,780 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 695 | 59 | | 754 | 727 | 27 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி | 68,395 | 8,354 | | 76,749 | 71,919 | 4,830 |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 5,729 | 76 | | 5,805 | 4,549 | 1,256 |
| தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு | 2,454 | 15,179 | | 17,632 | 1,769 | 15,863 |
| உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் | 955 | 1,081 | | 2,036 | 1,122 | 915 |
| விஞ்ஞானம்,தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | 4,277 | 1,498 | | 5,774 | 3,635 | 2,140 |
| திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி | 9,591 | 1,152 | | 10,743 | 8,301 | 2,442 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துசம் | 20,039 | 5,078 | | 25,116 | 18,278 | 6,839 |
| ஆரம்பக் கைத்தொழில்கள் | 3,161 | 28 | | 3,189 | 1,617 | 1,572 |
| **கடுகடன் சேவைக் கொடுப்பனவு** | 1,480,275 | | | 1,659,258 | 1,603,049 | 56,209 |
| **திறைசேரி நானாவித தலைப்பு** | 488,078 | (485,246) | | 2,832 | | 2,832 |
| **முழு மொத்தம்** | **3,628,110** | | **232,208** | **3,860,318** | **3,470,589** | **389,729** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம்*

### 2.6 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்கான உண்மையான செலவினம் மதிப்பிடப்பட்ட ஆகக் கூடிய செலவினமான ரூபா 26.04 பில்லியனுக்கெதிராக ரூபா 25.56 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை, உண்மையான மொத்தப் பெறுகையானது மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பெறுகையான ரூபா 21.04 பில்லியனுக்கெதிராக ரூபா 21.53 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கமைவாக, முற்பணக்கணக்குச் செயற்பாடுகள் 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் காணப்பட்டது. முற்பணக்கணக்கின் கீழான செயற்பாடுகள் ஆதனக் கடன் நீங்களாக அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணங்கள் என்ற வகையில் வர்த்தக நோக்கம் கொண்ட செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணங்கள் ரூபா 17.51 பில்லியனாகும். 2017 மே மாதத்தில் இடம்பெற்ற திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வட்டிச் சலுகை விசேட அனர்த்தக் கடன்கள் வழங்கப்பட்டன. அத்தகைய கடன்களை வழங்குவதற்கு அரசாங்க ஊழியர் முற்பணக் கணக்கின் மதிப்பிடப்பட்ட ஆகக்கூடிய செலவின வரையறையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன்கள் மற்றும் வாகனக் கடன்கள் அரச வங்கிகளினூடாக மேற்கொள்ளப்பட்டது. 2017 ஆம் ஆண்டின்போது ரூபா 10.91 பில்லியன் ஆதனக் கடன்களாக அரசாங்க வங்கிகளின் மூலம் 8,349 அரசாங்க

ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் இக்கடன் வட்டிக்காக அரசாங்கம் ரூபா 2.62 பில்லியனை மானியமாக வழங்கியது.

### 2.7 வரவு செலவுத்திட்டம் - 2017 முகாமைசெய்தல்

#### 2.7.1 நிதி மாற்றல்கள்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைவாக, வயர்மன்ட் நடபடி முறைகள் மற்றும் வரையறைகளைப் பின்பற்றி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளின் மாற்றல் அல்லது மீள் ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2007 நிதி வருடத்தின்போது நிதிப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி பொது திறைசேரியினால் 1,601 கோரிக்கைகள் நிதி மீள் ஒதுக்கீட்டுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

#### 2.7.2 குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

செலவினத் தலைப்பு 240, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின்கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் கருத்திட்டம் 2017ஆம் ஆண்டிலும் செலவின முகவராண்மைகளின் எதிர்பாராத அவசர மேலதிக நிதி தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக செயற்படுத்தப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் மொத்த நிதி ஏற்பாடானது ரூபா 488 பில்லியனாக காணப்பட்டதுடன் 2017 இற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள் உள்ளடங்களாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 268 பில்லியன் செலவின முகவராண்மைகளுக்கு குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக வழங்கப்பட்டது. 2017 இற்கான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட விசேட வழிகாட்டலுக்கமைவாக அனைத்து குறைநிரப்பு ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடுகளின் பொழிப்பு அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 7 : ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் உறுப்புரையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பொழிப்பு**

| | அச்சிடப்பட்ட மதிப்பீடுகளின்படியான நோக்கம் | தொகை (ரூபா மில்) |
|---|---|---|
| 1 | நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள். | 133,243 |
| 2 | நானாவித மீண்டெழும் செலவினங்களுக்கான ஏற்பாடுகள். | 36,128 |
| 3 | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள். | 268,205 |
| 4 | வெளிநாட்டு நிதிமூலம் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக மூலதனச் செலவினத்தில் ஏதேனும் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கான ஒதுக்கீடு மற்றும் வரிகள் மற்றும் தீர்வைகள் உள்ளடங்கலான நிதியளிப்பு தேவைப்பாடு | 50,500 |
| | **மொத்தம்** | **488,076** |

*மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக மாற்றப்பட்ட நிதி மற்றும் அத்தகைய மாற்றத்திற்கான காரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய

